# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

8075882

C

1. District : PERAMBALUR மாவட்டம் PS: VIGILANCE AND ANTI CORRUPTION DETACHMENT காவல்நிலையம் Year: 2021 ஆண்டு FIR No.: 04/2021 மு.த.அ. எண் Date: 20.04.2021 நாள்

2. (i) Act சட்டம்: PC ACT-1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 19.04.2021 நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : About 2000 hrs நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 2200hrs காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.04.2021 Time : 2200 hrs நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) — பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : Written
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: PERAMBALUR POLICE STATION, 2 Km WEST
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. ARMSTRONG FERNANDO குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : SESU FERNANDO தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 44 / 2021 நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : BUSINESS தொழில் (g) Address : 99, AVVAYYAR STREET, AMBEDKAR NAGAR, THURAIMANGALAM, PERAMBALUR DISTRICT முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   PALRAJ, INSPECTOR OF POLICE,
   PERAMBALUR POLICE STATION

8. Reasons for delay in reporting by the complainant / Informant: NO DELAY
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விபரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

இன்று 19.04.2021 இரவு 22.00 மணிக்கு பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது ஆம்ஸ்ட்ராங் பெர்னாண்டோ என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர், S.ஆம்ஸ்ட்ராங் பெர்ணான்டோ, த/பெ சேசு பெர்ணான்டோ, 99 அவ்வையார் தெரு, அம்பேத்கார் நகர், துறைமங்கலம், பெரம்பலூர் மாவட்டம். பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, பெரம்பலூர் அம்மா, நான் துறைமங்கலம் அம்பேத்கார் நகரில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் துறைமங்கலம் N.H கவுள்பாளையம் ரோடு மேக்சிமஸ் நகரில் 2/292-A என்ற விலாசத்தில் அரசு அனுமதி பெற்று Maximus Blue Metals, Maximus Crusher என்ற பெயரில் நிறுவனம் வைத்து நடத்தி வருகிறேன். 18.05.2011-முதல் 17.05.2021 வரை 10-வருடங்களுக்கு திரு.P.செந்தில்குமார் என்பவர் பெரம்பலூர் வடக்கு கிராம புல எண்.55/1-ல் கண்ட 1.00 ஹெக்டேர் குன்று புறம்போக்கு இடத்தில் குவாரி தொழில் செய்ய பெரம்பலூர் மாவட்ட ஆட்சியருடன் 18.05.2011 அன்று lease ஒப்பந்தம் செய்து கொண்டதை நான் திரு.P.செந்தில்குமார் என்பவரிடம் General Power of Attorney பெற்று 2016-வருடம் முதல் பாறைகளை உடைத்து பொதுமக்களின் தேவைக்கு ஏற்ப கிரஷர் மூலம் வெவ்வேறு size-ல் ஜல்லிகளாக்கி விற்பனை செய்து வருகிறேன். தினமும் வாடகை லாரிகளை வைத்து கற்களை குவாரியிலிருந்து அருகாமையில் இருக்கும் கிரஷருக்கு எடுத்து அனுப்புவேன். இந்நிலையில்

(Separate sheet enclosed)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .............................. Rank .................. to take up the Investigation / Refused Investigation / transferred to PS .............................. on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி .............................. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி; அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 20/04/2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 20/4/2021

15. Date & Time of despatch to the court: 20.04.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K.S.HEMACHITHRA, DSP,
Rank: நிலை PERAMBALUR, VLAC
20.04.2021

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பெரம்பலூர், ஊ.த.க பிரிவு குற்ற எண் 04/2021 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

நேற்று (18.04.2021) நான் எனது சொந்த வேலையாக திண்டுக்கல் சென்றிருந்தேன். பொதுவாக நான் இல்லாத நேரத்தில் குவாரியை மேனேஜர் திரு.பாபின் ஜெபராஜ் பார்த்துக்கொள்வார். நேற்று (18.04.2021) வழக்கம் போல் குவாரியில் எடுக்கப்பட்ட பாறைகளை திரு.வசந்தகுமார் என்பவருக்கு சொந்தமான TN-48-AB 6642 மற்றும் TN-49-BA 4827 ஆகிய இரண்டு வாடகை லாரிகளை வைத்து கிரஷருக்கு எடுத்து செல்ல லோடு ஏற்றி புறப்படும் நிலையில் தயாராக நின்ற போது, காலை சுமார் 7 மணி வாக்கில் அங்கு இரண்டு போலீஸ் வாகனத்தில் பெரம்பலூர் DSP திரு.சரவணன் அவர்களும் பெரம்பலூர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.பால்ராஜ் அவர்களும் காவலர்களுடன் எனது குவாரிக்கு வந்து ஆய்வு செய்துவிட்டு DSP மற்றும் ஆய்வாளர் அவர்கள் எனது மேனேஜரிடம் குவாரி மிக ஆழமாக தோண்டப்பட்டுள்ளதாகவும் பொது மக்களுக்கு அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ள தாகவும் கூறி லோடு ஏற்றி நிறுத்தியிருந்த மேற்படி இரண்டு லாரிகளையும் ஓட்டுநருடன் அழைத்துக்கொண்டு சென்றதாக எனது குவாரி மேனேஜர் திரு.பாபின் ஜெபராஜ் என்னிடம் போனில் தெரிவித்துவிட்டு அவர்களை பின்தொடர்ந்து பெரம்பலூர் காவல் நிலையத்துக்கு சென்று ஆய்வாளரிடம் குவாரி உரிமம் மற்றும் அது தொடர்பான ஆவணங்களை காண்பித்து கேட்டபோது ஆய்வாளர் குவாரி ஓனரை வந்து என்னை பார்க்க சொல்லு என்று சொல்லி அனுப்பியதாக எனது மேனேஜர் என்னிடம் கூறியதால் திண்டுக்கல் சென்றிருந்த நான் உடனே அங்கிருந்து புறப்பட்டு நேற்று (18.04.2021) மதியம் சுமார் 03.00 மணிக்கு பெரம்பலூர் காவல் நிலையத்துக்கு சென்ற போது அங்கு ஆய்வாளர் இல்லை. அப்போது மேற்படி இரண்டு லாரிகளும் காவல் நிலையத்துக்கு எதிரில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த போலீஸ்காரரிடம் விசாரித்தபோது ஆய்வாளர் சாயங்காலம் 05.00 மணிக்கு வருவார் என்று கூறியதால் நான் மறுபடியும் மாலை சுமார் 05.00 மணிக்கு பெரம்பலூர் காவல் நிலையத்துக்கு சென்றேன். நான் மாலை சுமார் 08.00 மணிவரை காவல் நிலையத்தில் காத்திருந்தும் ஆய்வாளர் வராததால் அங்கிருந்த போலீஸ்காரரிடம் தகவல் கேட்டபோது அவர் ஆய்வாளரை தொடர்பு கொண்டுவிட்டு என்னிடம் ஆய்வாளர் வெளி அலுவலாக சென்றுள்ளார் என்று சொன்னதால் நான் உடனே DSP அவர்களை போனில் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் நான் Election Duty-ல் இருக்கிறேன் ஆய்வாளரிடம் சொல்கிறேன் என்று சொன்னார். இன்று (19.04.2021) காலை சுமார் 06.30 மணியை போல எனது செல்போனுக்கு ஆய்வாளர் திரு.பால்ராஜ் அவர்கள் தொடர்பு கொண்டு உடனே பெரம்பலூர் போக்குவரத்து கழக டிப்போ அருகில் வரச்சொன்னார். அதன்படி நான் இன்று (19.04.2021) காலை 07.30 மணியளவில் போக்குவரத்து கழக டிப்போ அருகில் சென்று ஆய்வாளரை பார்த்தபோது அவர் என்னிடம் நான் நடத்திவரும் குவாரி மிகவும் ஆழமாக உள்ளதாகவும் பொதுமக்களின் உயிருக்கு அச்சுறுத்தும் வகையில் உள்ளது என்று DSP சொன்னதாகவும், குவாரி மீது புகார் இருப்பதாகவும் சொன்னார். நான் அவரிடம் எல்லா டாக்குமெண்ட்டும் வைத்துள்ளேன் தப்பாக எதுவும் செய்யவில்லை சார் என்று சொன்னேன். சரி நைட் 8 மணிக்கு ஸ்டேசனுக்கு வாங்க பேசிக்கலாம் என்றார். நான் 8 மணிக்கு ஸ்டேஷனுக்கு போனபோது ஆய்வாளர் அங்கில்லை. பின்னர் போனில் அவரிடம் வந்த விஷயத்தை சொன்னபோது தான் வெளியில் இருப்பதாக சொன்னார். அவரிடம் லாரிகளை கொடுக்கும்படி கேட்டேன். அவர் சும்மா லாரியை கேட்டுகிட்டு இருக்கிங்க ரூ.50,000/- கொடுங்க லாரியை ரிலீஸ் செய்துவிடறேன் என்றார். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை சார் என்றேன். இதில் நான் DSP-க்கும் கொடுக்கனும் என்றார். லஞ்சமாக

ஆய்வாளர் என்னிடம் கேட்ட ரூபாய் 50,000/- யை கொடுக்க எனக்கு விருப்பமில்லை. இருந்தாலும் பணம் ஏற்பாடு செய்து தருகிறேன் சார் என்று சொன்னேன். பணம் ஏற்பாடு செஞ்சிட்டு நாளைக்கு பேசுங்க நான் எங்க வந்து கொடுக்கனும்னு சொல்றேன் என்றார். எனக்கு ஆய்வாளர் கேட்ட பணத்தை லஞ்சமாக கொடுக்க விருப்பமில்லாததால் அவர் லஞ்சமாக கேட்ட பணம் 50,000/-யை எடுத்துக் கொண்டு ஆய்வாளர் பால்ராஜ் மீது லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்க வந்துள்ளேன். மேற்படி ஆய்வாளர் பால்ராஜ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். (Sd) Armstrong Fernando 19.04.2021. Madam, Received this written complaint from the complainant on 19.04.2021 at 22.00 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 20.04.2021 at 06.00 hrs in Perambalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.04/2021, U/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) K.S.Hema Chithra, 20.04.2021, DSP, VAC, PBR. I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Perambalur and the copies of the F.I.R to all other concerned Officials.

20/4/2021

(K.S.Hema Chithra)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Perambalur.